# Deposition of Witness
# In the Court of Additional Subordinate Judge, Tenkasi.

Mcop 59/2021

எ.ம.சா2 சரஸ்வதி

| | | |
|---|---|---|
| Name | : | சரஸ்வதி |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 19.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில்இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் மூ.த.சா.ஆ1. அழைப்பாணையில் கண்ட சுப்பிரமணியன் என்பவருக்கு பிக்கப் வேன் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பது குறித்து அழைப்பாணை அனுப்பபட்டிருந்தது. அவருடைய ஓட்டுனர் உரிமம் எண், வழங்கப்பட்ட தேதி இருந்தால் மட்டுமே தேடி எடுக்க முடியும்.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

சுப்பிரமணியன் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பது குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுப்பிரமணியனுக்கு ஓட்டுனர் உரிமம் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்படவில்லை. வேறு அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டிருந்தால் எங்களது அலுவலகத்தில் துலங்காது என்றால் சரிதான். பெயர், விலாசத்தை வைத்து

கொண்டு ஒட்டுனர் உரிமம் உள்ளதா என்பதை கண்டறிய முடியாது என்றால் சரிதான்.

(மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையை 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.